## தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு

நாள்: 13.08.20

பெறுநர்:

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம்,
சென்னை.

ஐயா,

பொருள் : விநியோக வட்டங்களில் பணிபுரியும் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் முதல் நிலை – கால நிலை ஊர் மாறுதல் உத்தரவு – நிறுத்தி வைக்கக் கோருதல் – தொடர்பாக.

பார்வை : Memo No.050123/G13/G.131/2020, dated: 10.08.2020.

--

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள பணியாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள், இக்கொரோனா நோய்த் தொற்று காலங்களில், தங்கள் குடும்பம் மற்றும் தங்களது உடல் நலன் ஆகியவற்றை புறக்கணித்து, மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வாரியத்தின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சிறப்பான பணி செய்து வருகிறார்கள்.

அவர்களின் நலனைப் பேண வேண்டியது வாரியத்தின் கடமையும் பொறுப்பும் கூட. ஆனால் சமீபகாலமாக வாரிய உத்தரவுகள் அதற்கு எதிராகவே உள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள, பார்வையில் கண்டுள்ள விநியோக வட்டங்களில் பணிபுரியும் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் முதல் நிலை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலநிலை ஊர்மாறுதல் உத்தரவு, களநிலையை கருத்தில் கொள்ளாமல் வழங்கப்பட்டதாகவே தெரிகிறது. தற்போது சென்னை உள்ளிட்ட மற்ற மாவட்டங்களில் கொரோனா நோய்த் தொற்று இன்னும் கட்டுக்குள் வரவில்லை. மின்வாரியத்தின் பணியாளர்களும் இந்நோய்த் தொற்றினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டும், இறந்தும் வருகிறார்கள். காலநிலை ஊர்மாறுதல் வழங்கப்பட்டால், அவர்கள் தங்கள் வீடுகளை மாற்ற வேண்டியுள்ளது. இது தற்போதுள்ள சூழலில் கடும் நெருக்கடியை தோற்றுவிப்பதாக அமையும்.

மேலும் தற்போது தமிழகத்தில் பரவலாக பருவ மழைப் பெய்யத் தொடங்கியுள்ளதால், மின்விநியோகத்தை தடையின்றி பராமரிப்பதில் சிக்கல்களும், காலதாமதமும் ஏற்படக்கூடும்.

CS Scanned with CamScanner

எனவே, மேற்கூறியக் கருத்துக்களை கருத்தில் கொண்டு தற்போது வெளியிடப்பட்டுள்ள, பார்வையில் கண்டுள்ள குறிப்பாணையின்படி விநியோக வட்டங்களில் பணிபுரியும் உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவியில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலநிலை ஊர்மாறுதல் உத்தரவினை கொரோனா நோய்த்தொற்று கட்டுப்பாட்டுக்குள் வரும்வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம் | TNEB கணக்காயர் களத் தொழிலாளர் சம்மேளனம் | தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு |
| தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம் | TNEB ஐ.என்.டி.யு.சி (சேவியர்) | TNEB ஐ.என்.டி.யு.சி (சுவர்ணராஜ்) | தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் |
| தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் | TNEB தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் | தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் கழகம் | TNEB நிதி மற்றும் கணக்கு அலுவலர்கள் சங்கம் |
| TNEB கார்டு பில்லிங் யூனியன் | TNEB அம்பேத்கார் தொழிலாளர் யூனியன் | தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் யூனியன் | TNEB எம்பளாயீஸ் பெடரேஷன் |

நகல்:

1. இணை மேலாண்மை இயக்குனர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்.
2. தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு

Scanned with CamScanner